அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 07/2020(II)

எனது இலக்கம் : EST-06/04/LOANS/4072
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.04.04

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்களுக்கு

**புதிய கொரோனா வைரஸ் காரணமாக, எழுந்துள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு அரச உத்தியாகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

மேற்படி தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 26.03.2020 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2020 மற்றும் 29.03.2020 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிகை 07/2020(I) இற்கு மேலதிகமானது.

02. சகல அரசாங்க உத்தியாகத்தர்களுக்கும் வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளின் II ஆம் பகுதியின் முற்பணக் கணக்குகளில், "அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்" என்ற தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன்களின் பொருட்டு அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் கடனுக்கான வட்டியை அறவிடுவதனை மீள அறியத்தரும் வரையில் இடைநிறுத்தம் செய்வதற்கு 01.04.2020 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

03. இச்சுற்றறிக்கை ஜனாதிபதிச் செயலாளரின் PS/CSA/சுற்றறிக்கை/18/2020 என்னும் இலக்கமுடைய மற்றும் 30.03.2020 ஆந் திகதிய சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளதோடு, அரசாங்க உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய கடன்களின் பொருட்டு அவர்களது சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் கடன் வட்டியை அறவிடுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய உரிய நிறுவனங்களினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு